பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

அஹமதி தமிழ் திருச்சபை

# ......இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன்


சகரியா 9:12

செய்தி மலர்
2020
ஆகஸ்டு

இதழ் : 04
மலர் : 17



# சபை ஊழியரின் அன்பு மடல்



## இரட்டிப்பான நன்மைகள்

கிறிஸ்துவிற்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும் அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த மாதம் ஜீலை முழுவதும் கண்மனி போல பாதுகாத்து வழி நடத்தின தேவன் வரும் ஆகஸ்ட் மாதத்திலும் புதிய ஆசீர்வாதங்களையும், புதிய நன்மைகளையும் புதிய கிருபைகளையும் தந்து நம் சபையை வழி நடத்துவாராக.

கர்த்தர் தம் பிள்ளைகளை ஆசீர்வதிக்கின்றபொழுது எப்போதும் ஒரேயொரு ஆசீர்வாதத்தை மட்டும் கொடுத்துவிட்டு அதிலே திருப்தியடைகிறதில்லை. மாறாக இரட்டிப்பான ஆசீர்வாதங்களை அருள் செய்து நம்மை மகிழ்ச்சியாக்குகிறார்.

ஆம், வரும் ஆகஸ்ட் மாதத்தில் கர்த்தர் நமக்கு இரட்டிப்பான நன்மைகளை கொடுத்து ஆசீர்வதிக்கப்போகிறார். எபேசி–3:20 சொல்கிறபடி "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நாம் நினைக்கிறதற்கும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்கு செய்ய வல்லவர்" அல்லேலூயா!

ஆண்டவர் கீழ்க்கண்ட வாக்குதத்தத்தை நம் சபைக்கு வழங்குகிறார். "நம்பிக்கையுடைய சிறைகளே அரணுக்குத் திரும்புங்கள். இரட்டிப்பான நன்மையைத் தருவேன் இன்றைக்கே தருவேன்" (சகரி–9:12)

கடந்த ஆறு மாதங்கள் பல்வேறு போராட்டங்களினால் நாம் சிறைப்பட்டுக் கிடந்தோம் கோவிட்–19 ஒருபக்கம், ஊரடங்கு உத்தரவுகள் ஒருபக்கம், விமானப் போக்குவரத்து தடைகள், வாகன போக்குவரத்து தடை, மருத்துவ உதவிகள் தடை, கைவிடப்பட்ட நிலமை, வேலை இழப்புகள், வருமானமின்மை, வறுமை, நோய்கள், பலவீனங்கள், நாசமோசங்கள், ஆராதனை தடைகள், ஒருவரையொருவர் சந்திக்கவும் விசாரிக்கவும் இயலாத நிலை, இன்னும் எத்தனையோ சொல்லன்னா இன்னல்களிலே நாம் சிறைப்பட்டு கிடந்தோம். இவைகள் மத்தியிலும் நமக்கு ஒத்தாசை வரும் பர்வதமாகிய இயேசுவை மாத்திரம் நாம் நம்பியிருந்தோம்.

யோசபாத் அரசனைப் போல என்ன செய்வதென்று அறியாதிருந்தபடியால் நம் கண்கள் கர்த்தரையே நோக்கியிருந்தது. நம் நம்பிக்கை முழுவதும் ஆண்டவரையே சார்ந்திருந்தது.

"3 அதனால் ஆண்டவர் சொல்கிறார் உங்கள் சிறைகளை விட்டு வெளியே வாருங்கள் நீங்கள் சிறைப்பட்டுக்கிடந்த காலங்கள் நிறைவடைந்தது. இனி நான் உங்களுக்கு நன்மைகளை தருவேன். அதுவும் இரட்டிப்பான நன்மையை தருவேன் என்று கர்த்தர் வாக்கு கொடுக்கிறார். நாம் வேண்டிக்கொண்ட காரியங்களை மாத்திரமல்ல நாம் வேண்டிக்கொள்ளாத மற்றும் நினைத்துக்கூட பார்க்காத காரியங்களையும் கூடுதலாக கர்த்தர் நமக்கு தரப்போகிறார். ஆமென்.

### 1. ஆபிரகாமுக்கு கொடுத்தது போல..

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டு நான் உனக்கு காண்பிக்கிற தேசத்திற்கு போ.

நான் உன்னை பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து உன் பேரை பெருமைபடுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். என்ற ஆசீர்வாதத்தை மாத்திரமல்ல கூடுதலாக " உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்று இரட்டிப்பான ஆசீர்வாதங்களால் கர்த்தர் ஆபிரகாமை ஆசீர்வதித்தார்.

பிரியமானவர்களே, இரட்டிப்பான ஆசீர்வாதங்களை ஆபிரகாம் பெற்றுக்கொண்டதற்கு அடிப்படையான காரணம், கர்த்தருக்கு நம்பிக்கையானவனாய் ஆபிரகாம் நடந்துகொண்டான். "அப்பொழுது கர்த்தர் ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவதினாலும் அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும் நான் செய்யப் போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும் தனக்கு பின்வரும் தன் வீட்டாருக்கும் நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியை காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன" என்றார். (ஆதி-18: 17-19)

நாமும் கூட நம்முடைய பிள்ளைகளுக்கு ஆண்டவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் ஒழுக்கங்களையும் எடுத்துக்கூறி வேத வசனங்கள் படி நடப்பதற்கு அறிவுரை கூறி உத்தமமாய் ஆண்டவரை பின்பற்றினால் ஆபிரகாமை ஆசீர்வதித்த கர்த்தர் உங்களையும் உங்களை சந்ததியையும் நிச்சயமாய் ஆசீர்வதிப்பார்.

"இந்த ஜனத்தை எனக்காக ஏற்படுத்தினேன் அவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள்"

" ஒரு சந்ததி ஆண்டவரை சேவிக்கும் தலைமுறை தலைமுறையாய் அது ஆண்டவர் சந்ததி எனப்படும்"

### உ. சாலமோனுக்கு கொடுத்தது போல...

கிதியோனிலே கர்த்தர் சாலமோனுக்கு இராத்திரியில் சொப்பணத்திலே தா-சனமாகி நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று தேவன் பேசினார். அதற்கு சாலமோன் உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருளும். ஏராளமாய் இருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான்.

அதற்கு கர்த்தர் நீ ஜனங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக்கொண்ட படியினால் உன் வார்த்தைகளின்படி செய்தேன். ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்கு தந்தேன். இதிலே உனக்கு சரியானவன் உனக்கு முன் இருந்ததுமில்லை, உனக்கு சரியானவன் உனக்கு பின் எழும்புவதுமில்லை என்று அவன் கேட்ட ஆசீர்வாதத்தையும் கொடுத்து விட்டு அதோடு கூட "நீ கேளாத ஐசுவரியத்தையும், மகிமையையும் உனக்கு தந்தேன். உன் நாட்களில் இருக்கிற இராஜாக்களில் ஒருவனும் உனக்கு சரியானவன் இருப்பதில்லை. என்று இரட்டிப்பான ஆசீர்வாதத்தை சாலமோனுக்கு கர்த்தர் கொடுத்தார்.

சாலமோன் இரட்டிப்பான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டதற்கு காரணம் அவன் தனக்காக வேண்டிக்கொள்ளாமல் தன் நாட்டு மக்களுக்காக வேண்டிக்கொண்டான். பிறருக்காக அவன் வேண்டிக்கொண்ட இந்த காரியம் ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது. (I–இராஜா–3:10–15)

பிரியமானவர்களே, நாமும் கூட மற்றவர்கள் மீது அன்பு வைத்து அவர்களுக்காக ஜெபம் செய்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்தால் நம்மையும் கர்த்தர் இவ்விதமாய் ஆசீர்வதிப்பார்.

"உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறரிடத்திலும் நீ அன்பு கூறுவாயாக" (மத்–22:39)என்று இயேசு சொன்ன கற்பனையை நம் வாழ்க்கையில் கடைபிடிக்கின்றபொழுது இரட்டிப்பான நன்மைகளை கொடுத்து கர்த்தர் நம்மையும் ஆசீர்வதிப்பார்.

## 3. யோபுவைப்போல...

தன்னுடைய பாடுகள், வருத்தங்கள், இழப்புகள், துன்பங்கள் மத்தியிலும் யோபு தன் சிநேகிதர்களுக்காக வேண்டுதல் செய்தான். காரணம் ஆண்டவர் யோபுவின் சிநேகிதர் பேசியதைக் கேட்டு அவர்கள் மேல் கோபமாயிருந்தார். என் தாசனாகிய யோபு பேசினது போல் நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய் பேசவில்லை என்று இரண்டு முறை கூறினார். ஆனால் யோபுவோ? பொறுமையாயிருந்து தன் சிநேகிதர்களுக்காக வேண்டுதல் செய்தான். அப்பொழுது கர்த்தர் யோபின் சிறையிருப்பை மாற்றினார். அவன் இழந்த உடல் சுகம், பெலன் யாவற்றையும் திரும்ப பெற்றுக்கொண்டான். அதோடு கூட யோபு முன்னிருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரட்டைத்தனையாய் ஆசீர்வாதங்களை திரும்ப பெற்றுக்கொண்டான். (யோபு–42:1–17)

பிரியமானவர்களே. நாமும் கூட யோபுவை போல நம்முடைய துன்ப நேரங்களில் ஆண்டவரை விடாமல் பற்றிக்கொண்டு பொறுமையாய் துன்பங்களை சகித்து நிதானமான வார்த்தைகளைப் பேசி மற்றவர்களை குற்றப்படுத்தாமல் அவர்களுக்காகவும் ஜெபிக்கும்பொழுது நம்மையும் யோபுவைப் போல கர்த்தர் இரட்டிப்பான ஆசீர்வாதங்களால் அலங்கரிப்பார். அல்லேலூயா.

"தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர் நீ செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன். (யோபு– 42:2) என்று யோபு தன் துன்ப நேரத்திலும் கர்த்தரைக் குறித்து நிதானமாக பேசினான். ஒரு தாலந்து வாங்கின மனிதனைப் போல அவன் ஆண்டவரை பற்றி நிதானமில்லாமல் பேச வில்லை.

## 4. சீஷர்களைப் போல..

ஆண்டவருக்காக எல்லாவற்றையும் அர்ப்பணித்து ஊழியம் செய்ய முன் வந்த சீஷர்கள் ஆண்டவரைப் பார்த்து நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மை பின்பற்றினோமே? எங்களுக்கு என்ன கிடைக்கும்? என்று கேட்டார்கள். அதற்கு இயேசு என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது, விட்டவன் எவனும் இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடே கூடநூறைத்தனையாக வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும்,பிள்ளைகளையும், நிலங்களையும், அதுமாத்திரமல்ல மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் (மாற்கு–10:28–30).

ஆம் பிரியமானவர்களே, கிறிஸ்துவுக்காக நாம் வாழ்கிற வாழ்க்கை, அவருக்காக நாம் செலவிடும் நேரங்கள், அவருக்காக நாம் பயன்படுத்தும் தாலந்துகள், அவருக்காக நாம் செலவிடும் காணிக்கைகள் இவைதான் தேவையான ஒன்று. இவைகளே நம்மை விட்டு எடுபடாத நல்ல பங்கு. சீஷர்கள் இவைகளை செய்ததினாலே இந்த உலகத்திலும் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதோடு கூட பரம ராஜ்ஜியத்தில் கூட அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இவ்விதமாக இரட்டிப்பான நன்மைகளை பெற நாமும் நம்முடை ஆவி ஆத்துமா சரீரத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்போமா?

ஆண்டவர் நம்மை பார்த்து கூறுகிறார். என் மாம்சத்தை புசித்து என் இரத்தத்தை பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் பிதாவை வேண்டிக்கொள்வேன் அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருளுவார். "நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன் உங்களிடத்தில் வருவேன்" (யோவா–6:48–56,14:16–18)

இப்படி அனுதினமும் வேதம் வாசித்து ஜெபம் செய்து ஆலய ஆராதனையிலே பங்கு கொண்டு திருவிருந்து எடுத்து ஆண்டவருடைய பாடு மரணம் இரத்தம் சிந்துதலை நினைவு கூர்ந்து அவருக்கு சாட்சியாய் வாழும்பொழுது நமக்கு பரிசுத்த ஆவியானவரை தந்து நம்மை வழி நடத்துவது மாத்திரமல்ல, நித்திய ஜீவனையும் நமக்கு தருகிறார்.

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரைஉம் ஆசீர்வதித்து வரும் ஆகஸ்ட் மாதம் முழுவதும் இரட்டிப்பான நன்மைகளை வழங்குவாராக!.

கர்த்தருடைய கிருபை உங்கள் ஒவ்வொருவரோடும் தங்கியிருந்து சகல ஆசீர்வாதங்களோடும் உங்களை வழி நடத்துவாராக.

கிறிஸ்த்துவுக்குள்

அன்பு சகோதரன்

சபையன் ஊழியர் சகோ. ஸ்டாலின்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

## யுத்ததங்களின் ஜெபத்திற்கு

ஒரு குறிபிட்ட வருடம் உலக மஹா யுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம் கர்த்தர் அவருக்கு விஷேசித்த ஜெப பாரத்தை கொடுத்து அந்த யுத்தத்தில் தேவனுடைய பிள்ளைகள் ஜெயம் பெறும்படி ஜெபிக்க கட்டளையிட்டார். கர்த்தருடைய பாரம் அதிகமாக இருந்தபடியினால் ரீஸ் ஹவல்சும் அவருடைய வேதாகம கல்லூரி மாணவர்களுமாக இரவும் பகலும் முழங்காலில் நிற்க ஆரம்பித்தார்கள்.

அந்த வேளையில் ஹிட்லர் மூர்கமாக யூதர்களை கொன்று குவித்துக் கொண்டிருந்தான். சிறு பிள்ளைகளை கூட அவன் விட்டுவைக்கவில்லை. பலரை நாடுகடத்தி கொண்டிருந்தான். சிறு சிறு குழந்தைகள். ஜெர்மானியிலிருந்து கிழக்கு போலந்து நாட்டின் எல்லைபுறத்திற்கு அகதிகாளாக ஓடி சென்றார்கள். அந்த பிள்ளைகளுடைய நிலைமை ஜெபவீரராகிய ரீஸ் ஹவல்சின் உள்ளத்தை வாட்டியது அவர் ஜெபித்தது மாத்திரமல்ல அநத சிறுவர் சிறுமியர்களுக்காக ஓர் அனாதை இல்லத்தையும் நிர்ணயித்தார்.!

ரீஸ் ஹவல்சின் ஜெபத்தை கர்த்தர் கேட்டார் ஹிட்லரின் சேனைகள் தோற்கடிக்கபட்டன.அமெரிக்கா இங்கிலாந்தும் இன்னும் கிறிஸ்தவ நாடுகள் வெற்றிமேல் வெற்றியை குவிக்க ஆரம்பித்தன. யுத்தம் புதிய வழியில் திரும்பியது, இத்தாலியின் சர்வாதிகாரியான முஸோலினி தோற்கடிக்கபட்டான். கிறிஸ்தவர்களை ஒடுக்கி ஜப்பான் வீழ்ந்தது. அவர்களுடைய பட்டினங்கள் அனு ஆயதத்தால் அழிக்கபட்டபோது அது எந்த விதமான நிபந்தணைகளும் இல்லாமல் சரணடைந்தது.

தேவ பிள்ளையே! நாம் இன்றைக்கும் ஒரு ஆவிக்குறிய யுத்தம் செய்து கொண்டிருக்கிறோம் . இந்த ஜெபத்திற்கு கர்த்தர் உன்னை அழைக்கிறார். நீ முழங்காளில் நிற்பாய் என்றால் ஜெயம் கொண்டவனாய் ஜெயம் கொண்டவளாய் விளங்குவாய். உன்னுடைய முழங்காளின் ஜெபம் உனக்கு ஆசீர்வாத்தை கொண்டுவருவது மாத்திரமல்ல தேசத்தின் எழுப்புதலை கொண்டுவருகிறது.!

ஜெப வீரரான ரீஸ் ஹவல்சின் கடைசி வர்த்தைகள் என்ன தெரியுமா? "Victory- Hallelujah" ஜெயம் அல்லேலூயா! என்பதாகும். இந்த வார்ததையை உச்சரித்துகொண்டே அவர் நித்தியத்திற்கு கடந்து சென்றார்.

தேவ பிள்ளைகளே உன்னுடைய உள்ளத்தில் மன்றாட்டு ஜெபம் இருக்கு மென்றால் நீயும் கூட தைரியமாக "ஜெபம் அல்லேலூயா! என்று முழங்கலாமே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.!

## வானத்திலே யுத்தம்

வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. (வெளி 12:7)

"வானத்திலே யுத்தம் உண்டாயிற்று" இந்த வார்த்தையை சற்று கவனித்து பாருங்கள். உலகத்திலே யுத்தம் நடக்கிறது போல தோன்றினாலும், உண்மையான யுத்தம் வான மண்டலத்தில்தான் நடக்கிறது. உலகத்தை பெரிய பெரிய தலைவர்கள் அரசாட்சி பண்ணுவது போல தோன்றினாலும், உண்மையில் அவர்கள் வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளே வழிநடத்தி ஆட்சிசெய்ய வைக்கிறது.

மோசேயின் நாட்களில் அமலேக்கோடு உள்ள யுத்தத்தை நாம் தியானித்தோம் யோசுவாவும் அமலேக்கியரும் ஒருவருக்கொருவர் நேரடியாக மோதிக்கொண்டார்கள் . இரதங்களையும் குதிரைகளையும், ஒரு வேளை அமலேக்கியன் கொண்டு வந்திருப்பான். இஸ்ரவேல் ஜனங்கள் தன் முழு பெலத்தோடு மும்மரமாக யுத்தம் செய்திருப்பார்கள்! ஆனால் அந்த யுத்தத்தின் வெற்றியின் இரகசியம் அவர்களுடைய கையில் இல்லை. அது வான மண்டலத்திலே இருந்தது. இன்றைய சூழ்நிலையும் அதுதான் எவ்வளவோ முயற்ச்சி தேவன் இன்னும் இந்த யுத்தத்திற்கு முடிவை ஆயத்தபடுத்தவில்லை

அமலேக்கியரின் பட்டசத்தில் விழுந்து போன லூசிபராகிய சாத்தானும் வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளும் யுத்தம் செய்தது. மறுபக்கத்திலோ மோசே கைகளை உயர்த்தினபோது இஸ்ரவேலருக்காக யுத்தம் செய்யும்படி மிகாவேலும், அவனை சூழ்ந்து உள்ள தூதர்களும் இறங்கி வந்தார்கள்.

வானத்தில் நடந்த யுத்தத்தை கவனியுங்கள், ஒரு பக்கத்தில் மிகாவேலும் அவனை சேர்ந்த தூதர்களும் நிற்கிறார்கள். மறுபக்கத்தில் வலுசர்பமும் அவனை சேர்ந்த தூதர்களும் நின்று கொண்டிருக்கிறார்கள்.

தேவனுடைய ஜனங்களாகிய நாம் ஜெபிக்கும் போது கர்த்தர் நம் ஜெபத்தை கேட்டு நமக்கு ஒத்தாசையாக நம்முடைய தேவ தூதர்களை அனுப்புகிறார். அதற்கு ஆதரவாக மிகாவேலும் தேவ தூதரும் காபிரியேல் தேவ தூதரும் நின்று கொண்டிருக்கிறார்கள். ரஃபேல் என்று சொல்லக்கூடிய ஒரு பிரதான தேவ தூதனை குறித்தும் கிறிஸ்தவ புத்தகங்கள் சொல்லுகின்றன. இதில் மிகாவேலும் அவனுடைய தூதர்களும் யுத்தத்தில் பிரபுவாக யுத்தத்தின் வீரர்களாக விளங்குகிறார்கள்.

மறுபக்கத்தை பாருங்கள் ! அங்கே வலுசர்பமும் அவனுடைய சேனைகளும் நின்று கொண்டிருக்கிறது, ஏன் அவனுக்கு வலுசர்பம் என்று பெயர் வந்தது.

அவன் வலுசர்பத்தின் ரூபத்தில்தான் ஏவாளை சந்தித்து அவளை வீழ்ச்சிக்குள்ளாக்கினான். தேவன் பேரிலுள்ள எரிச்சலை மனுஷர்மேல் காண்பித்து தேவனை பழிக்கு பழி வாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் மனுஷனுடைய வீழ்ச்சிக்கு வழிவகுத்தான்.

அவன் சரித்திரத்தை குறித்து நாம் அறிந்திருப்பது நமக்கு பிரயோஜனமாக இருக்கும். அவனை குறித்து எசே 28 ஆம் அதிகாரத்தில் நாம் அறியலாம். முன்பு அவன் கரத்தால் சிருஷ்டிக்கபட்ட ஒரு மகிமையாக தேவதூதனாய் விளங்கினான். அவன் காப்பாற்றுவதற்காக அபிஷேகம் பண்ணபட்ட கேருப் என்று வேதம் சொல்லுகிறது. நீ விசித்திரமாக செய்யபட்ட முத்திரை மோதிரம், நீ ஞானத்தால் நிறைந்தவன், பூரண அழகுள்ளவன், நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன். பத்மராகம், புஷ்பராகம், வைரம், பழிகப்பச்சை, கோமேதகம், பஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம், முதலான சகலவித ரத்தினங்களும், பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது, நீ சிருஷ்டிக்கபட்ட நாளில் உன் மேள வாத்தியங்களும், உன் நாக சுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தபட்டிருந்தது, நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணபட்ட கேருப், தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன் அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய், நீ சிருஷ்டிக்கபட்ட நாள் தொடங்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கபட்டது மட்டும் உன் வழியில் குறையற்றிருந்தாய்!"(எசே 28:12–15)

ஆனால் அவனுடைய உள்ளத்தில் மேட்டிமை வைத்த போது, பெருமை கொண்டபோது, கர்த்தருக்கு விரோதமாய் தன் உள்ளத்தை உயர்த்தினபோது கர்த்தர் அவனை பரலோகத்தில் இருந்து கீழே தள்ளினார், அவன் பூமியிலே விழுந்தபோது அவனோடு கூட ஒரு கூட்டம் தேவ தூதர்களும் சேர்ந்து விழும்படி செய்தான், அந்தோ பரிதாபம்! அவன் வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் தலைவனாக கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் தேவ ஜனங்களுக்கு விரோதமாகவும போராடிக்கொண்டிருக்கிறான்............

பரமகானானுக்கு செல்லுகிற நம்மை வழியிலே தடுத்து நிறுத்துவதற்காக அமலேக்கிய மாம்சத்தை தூண்டிவிட்டு நம்மை சோதிக்கிறான், நம்மை இடைவிடாமல் குற்றபடுத்தி குற்ற மனசாட்சியினால் சோர்வுகளை உண்டாக்குகிறான்

(வான மண்டலத்தின் யுத்தம் இன்னும் தொடரும்)

**இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்;** (ஏசாயா 43:19)

## 2020 ஜூலை மாத வேத வினாவுக்கு

1. ( யோபு 13:10,14)
2. எலியேசர் ( I நாளாகமம் 23:15,17)
3. இசக்கார் புத்திரர் ( I நாளாகமம் 12:32)
4. சரியாக தெரியவில்லை எஸ்றாவாக இருக்கலாம்
5. சவுல் ( I நாளாகமம் )
6. ( I நாளாகமம் 28:8)
7. ( I நாளாகமம் 11:6)
8. எஸ்பால் ( I நாளாகமம் 8:33)
9. ( I நாளாகமம் 2:35)
10. பத்து ( I நாளாகமம் 6:3–8)
11. ( I நாளாகமம் 15–18)
சவுல் , தாவீது ( I நாளாகமம் 12:19,15:29)
12. காத் , ஆசேர் ( I நாளாகமம் 27:16,22)
13. ஊர் ( I நாளாகமம் 2:19,50)
14. சவுல் ( I நாளாகமம் 17,18)
15. பெனாயா ( I நாளாகமம் 11,23)

## 2020 ஜூலை மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. அனுஷா டினோ

**அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார்.**
( சங்கீதம் 91:3)

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; . . . " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோ. ஜெப துரை
செல்வி.கெத்சியா ராஜேந்திரன்
சகோ. பிராங்ளின் கலை செல்வன்
சகோதரி . ஆனந்தவள்ளி ராஜேந்திரன்
சகோதரி. மெர்ஷெலின் ஏசுரெத்தினம்
செல்வி. காயத்ரி கொம்மையன்
சகோ. ஜாப் ஆபிரகாம் வில்கின்ஸ்
செல்வன். எரிக் நாதான் ஆன்டனி
சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்
சகோ. வில்சன் செல்லையன்
சகோதரி. எமிமாள் சாமுவேல்
சகோ. ஆரோக்கிய தாஸ்
சகோதரி. ஸ்நேக லதா கிறிஸ்டோபர்
சகோ. கென்சிங்ராஜா
செல்வி. புஷ்பா ராஜன்

சகோ. சதீஷ்குமார்
சகோ. ஆல்பர்ட் ஜேகப்
செல்வன். ஜெஃபின் ஞான ஜெபசிங்
சகோ. வேளாங்கண்ணி
சகோ. அருண் இம்மானுவேல்
செல்வன். ஆரோன் விஜயன்
சகோ. ஜெரின்
செல்வி. சிஃபன்சிஹா சாம்ஆனந்த்
செல்வன் ஆஃபிரீன் ஜாபஸ் சுதாகர்
சகோ. மேஷாக் சைமன்
சகோதரி. சவ்மியா சுனில் வின்ஸ்
செல்வி. மஹாலஷ்மி கோவிந்தராஜுலு
சகோதரி. ஆஸ்லின் ரோனியா
செல்வன். பெனோ ஜெரின்
சகோதரி. டெய்சி ஜூனா ஆன்டனி
சகோ. சங்கீதராஜ்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

## இந்த திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி /திரு. எபிநேசர்
திருமதி /திரு. ஜெயக்குமார் ஞானதாஸ்
திருமதி / திரு. ஸ்டீபன் ஜெயக்குமார்
திருமதி /திரு.டேனியல் ராஜ்
திருமதி /திரு. ராஜேந்திரன்
திருமதி / திரு. இம்மானுவேல் ஸ்டீபன்
திருமதி / திரு. ஜோசப் பீட்டர்
திருமதி / திரு. ஜெரின்

திருமதி / திரு. பால்ராஜ் ஆமோஸ்
திருமதி /திரு. ராஜேஷ் CR
திருமதி / திரு. சிவகுமார்
திருமதி / திரு. ஆரோக்கியராஜ்
திருமதி /திரு. டேனியல் குமார்
திருமதி /திரு. கமலதாசன்
திருமதி /திரு. மேஷாக் சைமன்
திருமதி /திரு. வேதானந்தம்

பாடல் பாடி ஆராதித்து அதிகநாள் ஆகிவிட்டது ஆகவே நம்மை நாமே பரிசோதிப்போம்

1. பதராத வாழ்வும் சிதறாத மனமும்
பரிசாக தேவன் அருள்வார் (பாடலின் பல்லவி என்ன?)

2. பயங்கரத்திற்கும் பறக்கும் அம்புக்கும் (அடுத்த வரி என்ன?)

3. கர்த்தரையே நம்பி ஜீவித்திட (அடுத்த வரி என்ன?)

4. பாலகர் தம் வாயினாலும்
பாடி உம்மை போற்றுவாரே (பாடலின் பல்லவி என்ன?)

5. தேவனின் ஆவியால் நிறப்பபட்டோம்
நாம் தேவ பிள்ளைகள் ஆனோம் (பாடலின் பல்லவி என்ன?)

6. முன்னனை மீதுற்ற சின்ன குமாரனை
முன்னுரை நூற்றபடி, இந்நிலை துற்றோனை(பாடலின் பல்லவி என்ன?)

7. தாழ்த்தி என்னை அவர் கையில் தந்து (அடுத்த வரி என்ன?)

8. விழ்புடன் கூழ தரித்ததரிப்போம்
விரைந்தவர் வந்திடுவார்? (பாடலின் ஆரம்பம் என்ன?)

9. ஒன்றை நான் கேட்டேன் ......... நாடுவேன்
...... ... மகிமையை காண ( விடுபட்ட வார்த்தையை எழுதுங்கள் )

10. பலவீனர் எம் உள்ளத்திலும்
தேவ பெலனை பெற்றிடவே (பாடலின் பல்லவி என்ன?)

11. என் ஜீவன் ...... ...
...... ... எழதும் ( விடுபட்ட வார்த்தையை எழுதுங்கள் )

12. கர்த்தர் நாமத்தை கொண்டாடுகிறோம்
சுத்தர்கள் போற்றும் தேவனே (பாடலின் பல்லவி என்ன?)

13. மேன்மை ......தாழ்மை ......
...... ...... வளர்ந்தார் ( விடுபட்ட வார்த்தையை எழுதுங்கள் )

14. பரிகாச சின்னமாம் சிலுவையிலே
பலியானேன் பாவி உனக்காய் (பாடலின் பல்லவி என்ன?)

15. பரிகாசமும் ......
பருகாயமும் ......( விடுபட்ட வார்த்தையை எழுதுங்கள் )

# 2020 ஆகஸ்டு மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1.பலி செலுத்துகிறவன் எவைகளிலிருந்து மிருகத்தை தெரிந்தெடுக்க வேண்டும் ?

2. சர்வாங்க தகன பலிக்கான கடாவின் குடல்கள் தொடைகளை எதினால் கழுவ வேண்டும் ?

3. புளிப்பில்லாத அடைகளின் மேல் எது பூசப்பட்டிருக்கவேண்டும் ?

4. பொரிக்குஞ்சட்டியில் பாகம் பண்ணப்படும் போஜன பலியை எதினால் செய்ய வேண்டும்?

5. சமாதான பலிக்கான காளை அல்லது பசுவை எங்கே கொல்ல வேண்டும்?

6. சமாதான பலியை ஆட்டுமந்தையில் இருந்து செலுத்தினால் எதை செலுத்த வேண்டும் ?

7. பலிகளில் கொழுப்பு முழுவதும் யாருடையது?

8. சபையின் பாவ நிவாரண பலி காளையை எங்கே சுட்டெரிக்க வேண்டும் ?

9. பிரபு மற்றும் ஜனங்களின் பாவ நிவாரண பலியின் மீதி இரத்தத்தை எங்கே ஊற்ற வேண்டும்?

10.சாட்சியாகிய ஒருவன் பாவம் செய்தால் எதை சுமப்பான் ?

11. எதன் தலையை அதன் கழுத்தினிடத்தில் கிள்ளி இரண்டாக்காமல் பலியிட வேண்டும்?

12. குற்றம் செய்தவன் தன் குற்றம் மன்னிக்கபடும்படி செலுத்த வேண்டிய பலி எது?

13. போஜன பலியில் மீதியானதை ஆரோனின் மக்களில் யார் புசிப்பார்கள் ?

14. பாவ நிவாரண பலி எங்கே கொல்லப்பட வேண்டும் ?

15. பாவநிவர்த்திக்காக இரத்தம் செலுத்தப்பட்ட பலியை என்ன செய்ய வேண்டும் ?

விடைகளை வருகின்ற 25-08-2020க்குள் (whatsApps #66015503-withName)அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை "லேவியராகமம்-1,2,3,4,5,6 புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

- - -தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; -மத்தேயு 7:7

# மிஷனரி செய்திகள்

## சாலமோன் துரைசாமி (1917–1992)

பிஷப் ஹீபர் கல்லூரி 1934–ஆம் ஆண்டு பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்பட்டது. சைமன் கமிஷன் பரிந்துரைப்படி அது மூடப்பட்டது.நூற்றுக்கணக்கான மாணவர்கள் தலையில் இடி விழுந்தாற்போல் தடுமாறி நின்றனர். 1664–ஆம் ஆண்டு திருச்சி–தஞ்சை திருமண்டலப் பேராயராகப் பொறுப்பேற்ற சாலமோன் துரைசாமி அக்கல்லூரியை மீண்டும் தழைக்கச் செய்தார். புத்துயிரும் புதுவாழ்வும் அக்கல்லூரிக்குக் கிடைத்தது. இருபது ஏக்கருக்கும் அதிகமான கட்டிடங்கள் கட்டப்பட்டன.

கண்டோர் வியந்து போற்றும் வகையில் அதனை உருவாக்கி, படிப்போரைப் பெருமையடையச் செய்தார் பேராயர் துரைசாமி. மக்களின் ஆன்மீக வாழ்விலும், பொருளாதார வளர்ச்சியிலும், கல்விப்பணியிலும் அக்கறை கொண்டு தமது செயற்திட்டங்களுக்கு சிறப்பான வடிவம் கொடுத்தார்.

திருச்சபை தன்னிறைவு பெற்றுக் காணப்பட வேண்டும் என்பதற்காகப் பல வணிக வளாகங்களை உருவாக்கினார். மேற்கு ஜெர்மனியின் உதவியுடன் ஏழைச் சிறுவர் சிறுமியர் இலவசமாகத் தங்கிப் பயில நாற்பதுக்கும் மேற்பட்ட விடுதிகளை ஏற்படுத்தினார். கல்விப் பணியில் பெரும் முன்னேற்றங்களை மக்கள் பெற்றிடச் செய்தார்.

பேராயர் துரைசாமி, தமிழ் கிறிஸ்தவ தமிழ்ப் பேரவை என்ற அமைப்பை தொடங்கி திறம்பட நடத்தினார். பேராயர் ஒரு சிறந்த எழுத்தாளர். கிறிஸ்தவக் கல்வி, இந்தியாவில் கிறிஸ்தவம், " என் கண்கள் அவரது மகிமையைக் கண்டன" போன்ற அழியா நூல்களைப் படைத்தார்.

மாபெரும் தலைவனாக வாழ்ந்த பேராயர் மே 22, 1992–ஆம் ஆண்டு கடவுளின் அழைப்பை ஏற்று பிஷப் ஹீபர் கல்லூரி வளாகத்திலுள்ள சிற்றாலயத்தில் விதைக்கப்பட்டார்.

அன்பரே உமது பெயரைச் சொல்லும்படி மக்களுக்காக எதனைச் சாதித்திருக்கின்றீர்.

கர்த்தரின் பணியில்,

அன்பு சகோதரர் S.சுகுமார்.

# உண்மையான ஊழியன்

"மனுஷருக்கென்று ஊழியம் செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள்"" (எபே. 6:8). ரோட்டின் ஓரம் ஒரு குடையின் கீழ் செருப்பு தைத்துக் கொண்டு போகிறவர்கள், வருகிறவர்களின் ஷுக்களை பாலிஷ் செய்து கொண்டிருந்தான் ஒரு சிறுவன். தகப்பன் தொழிலை இளமையிலேயே கற்றுக் கொண்டது நல்லதாய் தோன்றியது. அவர் இறந்த பிறகு அவனது தாயை கவனிக்க அது கை கொடுத்தது. அச்சிறுவன் காசுக்காக கடமையே என தன் வேலையை செய்யமாட்டான். யாரோ ஒருவர் பாலிஷ் போட தங்கள் காலணியை அவன் முன் நீட்டியதும் நிமிர்ந்து பார்த்து சிரித்த முகத்துடன், சிறப்பாய் நேர்த்தியாய் அதை செய்து முடிப்பான். எப்போதும் வழக்கமாய் வரும் ஒருவர் ஒரு நாள் அவனிடம் மிகவும் சிரத்தை எடுத்து, கவனமாய் வேலை செய்கிறாயே இதே வேலையை செய்யும் மற்றவர்களிடம் இல்லாத ஏதோ ஒன்று உன்னிடம் காணப்படுகிறதே அது என்ன? என்று கேட்டார்.

சிறுவன் மகிழ்ச்சியோடு ஐயா நான் ஒரு கிறிஸ்தவன். இயேசு கிறிஸ்துவின் குணநலன்களை என் வாழ்விலும் செயல்படுத்த பிரயாசப்படுபவன், அதோடு ஒவ்வொருவருடைய காலணிகளை நான் பழுது பார்க்கும் போதும் இயேசு ராஜா என்னிடம் வந்து என் காலணிகளுக்கு பாலிஷ் போடு என்று சொன்னால் நான் எப்படி செய்து கொடுப்பேனோ அப்படித்தான் உங்கள் ஒவ்வொருவருக்கும் செய்கிறேன் என்று கூறினான். அந்த நபர் இவனது வார்த்தையின் மூலம் கிறிஸ்துவை குறித்து அறிந்து வேதத்தை வாசித்து கர்த்தரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டான்.

மனுஷருக்கெல்லாம் ஊழியம் செய்யாமல் கர்த்தருக்கென்றே நல் மனதோடே ஊழியஞ் செய்யுங்கள் என்று அப். பவுல் எபேசு சபையிலுள்ள விசுவாசிகளுக்கு ஆலோசனையாய் சொல்கிறார். எபேசியர் ஆறாம் அதிகாரத்திலே பிள்ளைகளுக்கு, பெற்றோருக்கு, மனுஷருக்கென்று ஊழியம் செய்யாமல் கர்த்தருக்கென்று நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள் என்று கூறுகிறார். பிரியமானவர்களே! நாம் எந்த தொழில்செய்தாலும் எந்த வேலை செய்தாலும் நமக்கு மேலுள்ள அதிகாரிகளுக்காக, அரசாங்கத்திற்காக செய்வோமானால் வேலைப்பளு அதிகமாகும் போது அவர்கள் மீது கோபமும் எரிச்சலும் வரும். அநேக நேரங்களில் அரசாங்க வேலையிலும் சுய லாபத்தை தேடுகிறவர்களாய் இருப்போம். ஆனால் வேதம் கூறுகிற இந்த ஆலோசனையை நமக்குரியதாக்கிக் கொண்டு ஒரு நாளில் நாம் செய்யும் எந்த வேலையையும் நான் இதை கர்த்தருக்கென்று செய்கிறேன். அவர் இதை காண்கிறார் என்ற சிந்தையோடு செய்வோமானால் அந்த வேலையில் உண்மை, நேர்மை, நேர்த்தி, சிறப்பு யாவும் நாமறியாமலேயே வந்து விடும். கிறிஸ்து நம் மூலம் அந்த அலுவலகத்தில் மகிமைப்படுவார். இப்படி உத்தம கிறிஸ்தவர்களாக வாழ நம்மை அர்ப்பணிப்போம்

## வாலிபம் இயேசுவுக்கே.

பழைய ஏற்பாட்டில் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் பிறந்த இரண்டாவது மகன் பெயர் யாக்கோபு. இந்த யாக்கோபின் நினைவாக புதிய ஏற்பாட்டின் காலத்தில் பலர் இந்த பெயரை வைத்துக் கொண்டார்கள். இன்றும் பலர் இந்த பெயரை வைத்துக் கொள்ளுகிறார்கள். குறிப்பாக மரியாளின் கணவரான யோசேப்பின் தகப்பன் யாக்கோபு. செபெத்தேயுவின் மகனும் யோவானின் உடன் பிறந்தவனுமாகிய யாக்கோபு. (இவரும் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவரும், புதிய ஏற்பாட்டில் ஸ்தேவானை அடுத்து இரண்டாவது இரத்த சாட்சியாய் மரித்தவர்). மரியாளின் மகனும் இயேசுவின் சகோதரனுமாகிய யாக்கோபு. (இவர்தான் யாக்கோபு என்ற பெயரில் ஒரு பொதுவான நிருபத்தை எழுதினவர். இவருடைய அண்ணனாகிய இயேசு கிறிஸ்து உயிரோடு இருக்கும் போது அவரை தேவகுமாரன் என்று விசுவாசிக்கவில்லை. இயேசு உயிர்த்தெழுந்த பிறகு இவருக்கும் தரிசனமானார். பின்புதான் இயேசுவை தேவன் என்று விசுவாசித்தார்). அல்பேயுவின் மகனாகிய யாக்கோபு. (இவருடைய சகோதரன்தான் மத்தேயு. அல்பேயுவின் மகனாகிய யாக்கோபு இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவர்).

இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களில் இருவர் பெயர் யாக்கோபு. ஒன்று நாம் எல்லோரும் அறிந்த யோவான் சுவிஷேசத்தை எழுதிய யோவானின் சகோதரன் யாக்கோபு. மற்றொருவர் அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு. இவரைப் பற்றி வேதத்தில் பெயரை தவிர வேறு எதுவும் காணப்படவில்லை. இவர் கப்பர்நகூமை சேர்ந்தவர். இவரது ந்தையின் பெயர் கிலியோபாஸ் என்றழைக்கப்பட்ட அல்பேயு. தாயின் பெயர் மரியாள். இந்த மரியாள் இயேசுவின் தாயாகிய மரியாளின் நெருங்கிய உறவினர். வரிவசூலிப்பவராக இருந்த மத்தேயுவின் உடன் பிறந்த சகோதரனே இந்த யாக்கோபு. இவர்கள் குடும்பத்தில் யோசேப்பு எனப்பட்ட மற்றொரு சகோதரனும் சலோமி எனப்பட்ட சகோதரியும் இருந்தார்கள். இவர்கள் இஸ்ரவேல் ஜனங்களிடையே ஆசாரிய ஊழியம் செய்யும்படி அழைக்கப்பட்ட லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இந்த யாக்கோபு கானானியனாகிய சீமோனைப் போல செலோத்தே என்ற தீவிரவாத பிரிவைச் சேர்ந்தவர். செலோத்தே பிரிவைப் பற்றி கானானியனாகிய சீமோனின் அறிமுகத்தில் காணலாம்.

திருச்சபை வரலாற்றில் பவுல், பேதுரு, அகஸ்டின், லூத்தர் போன்ற குறிப்பிட்ட சிலரையே நாம் இன்று நினைவில் வைத்திருக்கிறோம். ஆனால் பல்லாயிரக்கணக்கான பெயர் அறியப்படாத ஊழியர்களாலும் ஆயிரக்கணக்கானோர் சிந்திய இரத்தத்தினாலுமே திருச்சபை வளர்ந்தது. நாம் இப்பொழுது படித்துக் கொண்டிருக்கும் அல்பேயுவின் மகனாகிய யாக்கோபும் இதற்கு முன்னோடியாக விளங்குகின்றார். இயேசு கிறிஸ்து தம்முடைய ஊழியத்தின் போது நிக்கோதேமு, சக்கேயு மற்றும் பலரை சந்தித்தார். ஆனால் அவர்களை தமக்கு சீஷராக வரும்படி அழைக்கவில்லை. ஓர் அறிமுகம் இல்லாத யாக்கோபைதான் இயேசு அழைத்தார். இந்த பெரிய பாக்கியம் பெற்றவர் ஏழையைப் பரியாசம்பண்ணுகிறவன் அவனை

உண்டாக்கினவரை நிந்திக்கிறான்: -நீதி. 17:5 தான் இவ் யாக்கோபு. நாமும் யாக்கோபைப் போல அறியப்படாத நபராகவோ அல்லது புகழ் பெறாதவர்களாகவோ இருக்கலாம். என்றாலும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டு அவருடைய சொந்த பிள்ளைகளாக இருக்கிற நாம் எவ்வளவு பெரிய பாக்கியவான்கள். நம்முடைய பெயர்கள் வரலாற்றில் எழுதப்படாமல் போகலாம். ஆனால் பரலோகத்தில் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புஸ்தகத்தில் எழுதியிருந்தால் நாம் பாக்கியவான்கள். துவக்ககால வரலாற்றாசிரியர்கள் இந்த அல்பேயுவின் மகனாகிய யாக்கோபும் இயேசுவின் சகோதரர்களில் ஒருவரான யாக்கோபும் ஒருவரே என்று எண்ணி குழப்பமடைந்திருக்கிறார்கள். அல்பேயுவின் மகனாகிய யாக்கோபு தோற்றத்தில் இயேசுவை போலவே இருந்தார். அதனால்தான் உண்மையான இயேசுவை கண்டு பிடிப்பதற்காகவே பிரதான ஆசாரியர்கள் யூதாஸுக்கு 30 வெள்ளிக் காசுகளைக் கொடுத்தார்கள். இயேசுவின் சகோதரரான யாக்கோபு இயேசுவின் சீடன் அல்ல. இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த நாட்களில் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு இவருக்கு தரிசனமானார். அதற்குப் பின்புதான் இயேசுவை பின்பற்றினார். இந்த இயேசுவின் சகோதரரான யாக்கோபு தான் யாக்கோபு நிருபத்தை எழுதினவர்.

இயேசுவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவரான அல்பேயுவின் மகனாகிய யாக்கோபு சீரிய திருச்சபையில் முதல் பேராயராக பணி புரிந்தார். இவருடைய நாட்களில் எருசலேமில் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைக் குறித்து பிரசங்கிக்கக் கூடாது என தடை பண்ணப்பட்டது. ஆனால் இவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை குறித்தும் அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்தும் யாருக்கும் பயப்படாமல் பகிரங்கமாக பிரசங்கித்தார். முதுகெலும்பில்லாமல் ஒரு மனிதனால் நிற்க முடியாது. ஒரு மனிதனுக்கு முதுகெலும்பு எவ்வளவு முக்கியமோ அதுபோல வேதத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மனிதனுக்கும் உயிர்தெழுதலின் நம்பிக்கை முக்கியமாகும். நமக்கு முன்மாதிரியாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுதலின் முதற்பலனானார் என்று எருசலேமில் உள்ள யூதர்களுக்கு அப். யாக்கோபு போதனை செய்தபடியால், யூதர்கள் கடுங்கோபம் கொண்டு அப். யாக்கோபை கல்லெறிந்து கொன்றார்கள்.

இரத்த சாட்சியாக மரித்த அப். யாக்கோபு எருசலேமில் அடக்கம்பண்ணப்பட்டார். ஜஸ்டினியன் இவரது எலும்புகளை எடுத்து கான்ஸ்டான்டிநோபிள்பட்டணத்திலுள்ள புனித அப்போஸ்தலர் ஆலயத்தில் பத்திரப்படுத்தினார். கி.பி 572-ல்இவரது எலும்புகள் ரோம் நகருக்கு எடுத்து செல்லப்பட்டது. போப் மூன்றாம் ஜான் ஆலயம் ஒன்றைக் கட்டி அதில் இவரது எலும்புகளை வைத்தார். இந்த ஆலயம் பிலிப்பு, யாக்கோபு அப்போஸ்தலர் ஆலயம் என்று முதலில் அழைக்கப்பட்டது. பத்தாவது நூற்றாண்டிலிருந்து இந்த ஆலயம் புனித அப்போஸ்தலர் ஆலயம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு பிலிப்பு, யாக்கோபு மற்றும் பிற அப்போஸ்தலர்களின் எலும்புகளும் வைக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சகோதரிகள் பகுதி

# Praise the lord

Greetings to you all in the matchless name of our head and savior Jesus Christ our god us a great big wonderful god who has been preserving us from all evil hitherto. Though the whole world seems to be in darkness and cheats due to the pandemic covid- 19 god has really been a light to us. remaining all our fears and depressions. we as sisters in Christ it is our duty to continue having faith in the hard and bend our knees in prayer for a miracle of deliverance to happen in our lives personally as a family and as a community in this world.

Ube psalms 18:28 we read in the word of god. "For thou wilt light my candle the hard my god will enlighten my darkness"

it is the will of god that our lives should be full of light and not live in darkness our god is a god of light and in harm there is no darkness. we read in genesis 1:3 the very first thing god created was light, to rename the world and darkness which was prevailing upon the earth praise be to the holy name of the word for this. we as god's children have been called out of darkness and into the marvelous light. As god's elect, we were chosen for a foundation that is everlasting. precious beyond compares, because our foundation is built upon Christ and his cross. this guess us a firm foundation to stand on whenever life presents us with challenges.

The darkness in our lives may be so many problems we face in our daily to day life. It may be either a sickness loneliness debts bondage's from Satan fears and anxieties depression bareness curses prevailing in the family bitterness any other problems god is the only one who can solve it. without god's will even a single hair from our head will not fall down. we have been carried in the palms of god and he is the one carries us bears us and delivers us.

In mark 7:25-30 we read about a Greek woman, who had a darkness in her life. her daughter was possessed by an impure spirit. let us see how her darkness was removed.

1. she was a gentile woman but she knew Jesus was the only one who could heal her daughter she trusted in the hard wholly .in proverb 3:5 we read that trust in the hard with all yours heart and do not lean on your cum understanding. so far our darkness to be removed we must trust in the hard with all our heart mind and soul.

2. she had perseverance in Mathew 15:23 we read that Jesus did not say a word when she pleaded for the deliverance of her daughter but she kept on telling her request she did not stagger Ephesians 6:18 we read that praying always with all prayer and supplication in the spirit and watching thereunto with all perseverance and supplication for all abuts. when we keep on praying god who is a prayer answering god will answer all prayer and remove our darkness.

3. she had humbleness when Jesus answered children's bread Cabot be cast to dog sage answered hard to get the dogs eat of the crumbs which fall from their master table god give the grace to the humble . I peter 5:5 let us humble ourselves before our sovereign god for our darkness to be removed.

4. she worshipped the word. our word is our god who dwells among praises. the wall of Jericho were broken down due to praises let us worship our word with all our heart mind and soul he alone is worthy of all worship and praise. 5. she had faith Jesus is our fare runner of faith. let us have complete faith in him Mathew:22 we read that "And whatever you ask in prayer, you will receive, if you have faith" when Jesus saw the persistent faith of the woman he completely delivered her daughter from the bondage of Satan.

Let us continue trusting in the word have faith in him worship him preserve in prayer and have a humble spirit for the darkness in our lives to be removed. depend on the only source of light our word Jesus Christ to lighten our path let us also follow the foot steps of our word shine as lights for him and glorify his name.

TRUST IN THE LORD AND DON'T DESPAIR
HE IS A FRIEND SO TRUE TO YOU
NO MATTER WHAT YOUR TROUBLES ARE
JESUS WILL SEE YOU THROUGH
SING WHEN THE DAY IS BRIGHT
SING THROUGH THE DARKEST NIGHT
EVERYDAY ALL THE WAY
LET US SING,SING SING

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி
பிரிசில்லா ஆமோஸ்

ஏனெனில், மாம்சத்தோடும்
இரத்தத்தோடுமல்ல,
துரைத்தனங்களோடும்,
அதிகாரங்களோடும்,
இப்பிரபஞ்சத்தின்
அந்தகார
லோகாதிபதிகளோடும்,
வானமண்டலங்களிலுள்ள
பொல்லாத ஆவிகளின்
சேனைகளோடும்
நமக்குப் போராட்டம்
உண்டு

எபேசியர் 6:12

உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக
ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் –

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only